உ

சிவமயம்.

இஃது
கோவிற்பட்டித் தாலூகா,
எட்டையபுரம் ஜமீன்
சோழபுரம்
சி. மா. அ.
இ ர ா ம ச ா மி க்
கவிராய ரவர்கள்
இயற்றிய,

செந்தமிழ்
பாசுர பக்திரஸக் கீர்த்தனை.

விருதுநகர்,
சச்சிதானந்தம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது
1925.

விலை அணா 4.

523
OFFICE OF THE REGISTRAR OF ... 11 SEP 1925 MADRAS
Q22:417x
N25
58730

உ

சிவமயம்.

செந்தமிட் பா[illegible]ர

பக்திரசக்கீர்த்தனை.

இஃது

கோவிற்பட்டித் தாலூகா, எட்டையபுரம் ஜமீன்

சோழபுரம் மகா-ள-ள-ஸ்ரீ

சி. மா. அ. இராமசாமிக் கவிராயரவர்கள்

இயற்றியது.

இது

ஷையூரிலிருக்கும், இரங்கூன் வர்த்தகரும், ஷையூர்

நாடார்ஸ்கூல் மானேஜருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ

ம. பே. சு. ஷண்முகவேல் நாடாரவர்கள்

பொருளுதவிகொண்டு;

விருதுநகர், ஸ்ரீமான்

இராமலிங்கக் குருக்களவர்களது

சச்சிதானந்தம் பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1925

விலை அணா 4.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 SEP 1925
MADRAS

Q2:417x
N25

சாத்துக் கவிகள்.

விருதுநகர், ஸ்ரீமான்

இராமலிங்கக் குருக்களவர்கள் இயற்றிய

வேண்பா.

பொன்னகர்க்கு மேலாய்ப் புகலுகின்ற சோழபுர
நன்னகர்வாழ் ராமசா மிக்கவிஞன்—சொன்ன தமிட்
பாசுரத்தே னுண்டு பயித்தியமீ சற்கொழிந்தாற்
பேசுவா ருண்டோ பிழை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக சுவாமியவர்களின் மாணவர்களி
லொருவராகிய மகா-ா-ா-ஸ்ரீ
சங்கணகரத் தமிழ்நேமி

தங்கசாமிக் கவிராய ரவர்கள் இயற்றிய

விருத்தம்

[illegible]லைக் கடைந்தரிமுன் பண்ணவர்கட் கமுதளித்த
[illegible]பே போன்று
தீர்க்கமுடன் [illegible]மிழின் சிந்துவினைக் கடைந்தழகு
சேயர்[illegible] கின்ப
மார்க்கவமு தாயச்சு[illegible]ர்த மாண்புநிறை கீர்த்தனங்கள்
வ[illegible]னன் பூந்
தார்க்கனக ம[illegible]பத் தன்சோழ புரம்ராம
சா[illegible] தானே.

58930

சின்னக்காளாம்பட்டி யென்ற சிவகாளநல்லூர்

மா. தவமணி உபாத்தியாய ரவர்கள் இயற்றிய

விருத்தம்.

கண்கவர் மலருட் களிமது வதுவோ
கனகவொண் கலத்தினின் னமுதோ
திண்கவர் விலதே வருணார்ச் சேர்க்குந்
திறத்தருட் சியோசொலுந் தன்மை
மண்கவ ரிசையிற் பிறங்கிடு சோழ
மணிநகர்க் கணியென வான்ற
பண்கவர் மொழியி னிராமசு வாமிப்
பாவல னுதவுபா சுரமே.

சாத்துக் கவிகள் முற்றிற்று.

சிவமயம்.

செந்தமிட்பாசுர
பக்திரசக் கீர்த்தனை.

விநாயகர் துதி.

உம்பர் கோடிகள் வாழ்த்திட வுயர்வடி வேலன்
இம்பர் வாரிதி யுலகெலாஞ் சுற்றியே மாந்த
கொம்பு மாங்கனிக் கரன்வலம் போந்துகைக் கொண்ட
தம்பி ரானிரு பதமலர்க் கனுதினஞ் சரணே.

ஸ்ரீராமபாதமு என்ற தியாகராஜ மெட்டு.

பல்லவி.

ஓங்கண பதியே வுகந்தரு ணிதியே
வுனதிரு பதங் கதியே (ஓங்

பாங்கானையங் கரனே பார்வதி சுதனே
பாவை வல் லபைமகிழ்ப
முப்பொருள் வா ரிதியே ஓங்

கலைமகள் துதி.

சுத்தவெள் ளையுடுத்தித் தூயநற் பணிகள் பூட்டி
வைத்தநூல் தகமுங்கொண்டு மலர்க்கையால் வீணைமீட்டும்
வித்தகி கமலவாணி விமல[illegible] பசல் பாணி
நித்திய கோமளமுஞ் சரஸ்வதி யருள்செய் வாயே.

புள்ளிக்கலாப மயில் என்றமெட்டு.

பல்லவி

வெள்ளைக் கமலமதில் மேவி வளர்
விமலி நான்முகனார் தேவி விந்த
வெள்ளைக் கேசரி வந்து வாழ்வைத் தாசிறந்து
வேணி மலர் வாணி
உள்ளக் கமல மதி லுவந்து கவி
பூணக்கும் போதென் நாவி லிருந்து என்றும்
ஓதத் தான் கிருபை யாகத்தான் தொழுதேத
னுனையே யெங்க ளன்னையே

காளியம்மன் துதி.

எழுசீர்க்கழில் நெடிலடி ஆசிரிய விருத்தம்.

எத்தனை பிறப்பெடுத் தல்லலுற் றேன்பிறவி
யெய்தாத கருணை வேண்டும்
இரவுபக லற்றவிட மானபேரின்ப நான்
எய்திடச் செய்தல் வேண்டும்
மந்தம் பிடித்தவென் சித்தந் திருத்தியுன்
மலரடித் தொண்டர் நேசம்
மறவாத பெருவாழ்வு தருவாய்நீ யிதுவே
மதுமாரி சொரிவாசவி
தத்துவம் நிறைந்தபே ரானந்தமெய்த் தொண்டர்
சற்குண மனத் தாமரைத்

நாதவிழ்ந் தொழுகுபே ரின்பரச வெள்ளமே
சதுர்மறைப் பொருளின் முடிவே
வத்தியி லெழுந்தசெஞ் சுடர்மணித் தீபமே
வளர்சோழ மணிநகரில் வாழ்
மாகனக வில்லாளி பாகனைய சொல்லாளி
மாதுபத் திரகாளி யே.

பழனிமாமலையில் வாழ் என்றமெட்டு.

பல்லவி.

அம்பிகா வன்பர்கள் போற்றுஞ் சீமாட்டி
யருள்செ யெம் பிராட்டி
நம்பினே னின்பவமு தூட்டிச் சீராட்டி
நற்கதி கூட்டி (அம்

தொகையறா.

அருள்பெருக வேண்டுமுன் னடியருற வேண்டுமெனை
யாளடிமை யாக்கவேண்டும்
அரியதனம் வேண்டுமினி தகமகிழ வேண்டுமெனை
யாதரித்தருள வேண்டும்.

எடுப்பு.

நத்தினேன் பக்தர்க ணித்தம் கொண்டாடும்
உத்தமி நீயே
சத்தியம் முத்தமிழ் வித்வ விராம
சாமிநேசி தாயே (அம்

சேந்திக்குமர வேளுண்டும் என்ற மெட்டு.

வந்தாதரித் தருள்வாயே மகேஸ்பரியே (வந்
வரை ராஜர்க்கொரு மகளாய் வருசிவ
பெருமானுக் கெழின் மணியே யடியேனை (வந்
மாரிவல் வீரியுதாரி நன் நாரியே
மேருவில் லாருப காரியென் நேரினில் (வந்
மலர்ப் பதத்தையெ னிருதய முட்பட
நினைத்திடப் பர சுசித்ர வித்ததி (வந்
மந்திர முந்தவோர் தந்தைமுன் வந்துரை
மைந்தனையும் பெறு சுந்தரி யெந்தனை (வந்
மகிடத் தடல்மணி முடியற் றருளவும்
மடியச் சமரிடு நெடியத திரிபுரை (வந்

சரணம்

எந்தாய் பராபர ஈஸ்பரி யேயுனக்
கேதுகுறை செய்தேன் ஏழையல்லோ நானே
பந்தபாச மென்னைப் பற்றிருக்கப்
பான்மைக்குயர் ராம சாமிக்கருள் புரி
பங்கபமிகு மலரடியது தங்கிடு மடியவர் கணமொடு
மங்களகர முட னனுதினம் இங்கித சுபமிகு குணநய
பாரின்சுக பேரின்பமு
மேதந்திட வேயெந்தனை (வந்

சுப்பிரமணியர் துதி.

எழுசீர்க்கழில் நெடிலடி யாசிரிய விருத்தம்.

மங்கள விசாகனே துங்கவபி ஷேகனே
வண்கலப மயில்வா கனே
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
வள்ளிமகி ழும்லோ லனே
செங்கமல வதனனே தங்குமெழின் மதனனே
சிங்கமுக சூரத கனனே
சிந்துகவி ராசனே வெந்தைபிர காசனே
செந்திலம் பதிவா சனே
எங்களொரு குமரனே பொங்கசூரர் சமரனே
யெங்கனு வணங்கு பரனே
எண்ணரிய முருகனே கண்ணனொரு மருகனே
யெண்ணகல மயிலி ரகனே
தண்கடம் பணிதாம நின்பதந் துதிராம
சாமிக்கு கந்தருள் செய்வாய்
தண்டா மரைச்சுனையின் வண்டார் திருப்பழனித்
தண்டா யுதக் கடவுளே.

அடைக்கலம் ரகுராமா என்ற மெட்டு.

பல்லவி

தென்பரங் குன்றின் வே லாறு கூலா
தெய்வானை வள்ளி லோ லா மாசிலா

அன்பர்கள் போற்றுந் தேவா
ஆதியந்தமு மாவா
நம்பு மெந்தனைக் காவாய்
ஞானபண் டிதனே வா

நாயே னுன் தஞ்சம் நாதா யேன் வஞ்சம்
மாயப்பிர பஞ்சம் யாய்கையால் நெஞ்சம்

வாடியே ஓடியே
தேடியே நாடினேன் (தென்

தந்தைக்கு மந்திரோப தே சஞ்சொல்
கந்தப்ப செந்திக் கோவில் வா சஞ்செய்

முந்தக் கிரி பிளந்தா
முற்படு வே லணிந்தாய்
கொந்தக் கடம் பணிந்து
குறவர் குலத் தெழுந்த

கோலக் குறமயிலும் கோபதி தருமயிலும்
மாநர்த் தனமயிலும் வரைகடவிய வயிலும்

மாமலர்ப் பதமுத
லாய் ராம சாமி துதி (தென்

காந்திமஹான் என்ற மேட்டு.

பல்லவி

கந்தாகுகா கடம்பா முருகா னந்தனே யுமை
யாள் மைந்தனே (கந்

செந்தியில் வாரா திகழு முல்லாசா
சேயனுக்கருள் தாதா குரு நாதா வென்மேல் வாதா துதி
செய்யச் சங்கடந் தீராய் கதி யெய்தற்கிங் கிடந் தாராய்
சிவசுப்பிர மணியப்பிர
ணவவுற்பவனெனும்வித்தக
சிகியுஞ் சுப நடனஞ் செய
சுக மங்கள மொடு வந்தருள் (கந்
சூடப்பிர காசா சோதிப்பிர வேசா
சூர்குலச் சம்மாரா மயில்வீரா வயலூரா வெனைச்
சோதனை செய்ப லாமா இந்த வாதுகள் வீண் போமா
சுடர்முத் தொளிர் விடுபற்பல
வளையற் பொதி விலை செப்பியே
தடருங் குற மட மங்கையை
வடிவங் கொள மணமும்புரி (கந்

ஓதிருநல்லூர்வளர் என்ற மேட்டு.

பல்லவி.

அன்பர்தொழுந் தென்பழனி வேலா வருட்
பண்புபெறும் அம்பிகையின் பாலா வெனை
யன்புடன் விரும்புமது சூலா மூனம்

அடலசுரர்கள் பொடிபட வொளிர்
வடிவாயில்கொடு கடவிடு முயர்
ஆறுமுகமானவொரு தேவா வெங்க
ளாண்டவனே யாண்டருள்செய் வாவா. (1)

தந்தைக்குப தேசகுரு நாதா பரங்
குன்றக்குடி மீதுவளர் போதா வன
சந்தக்குற மாதவிசு மேதா வென்னும்
சரவணபவ ஆறுமுகக்குக
குருபரசிவ யிரணவமுல
சண்முகசடாசுதரவி நோதா விந்தப்
பண்மிகுகடாக்ஷமருள் தாதா. (2)
இந்நிலவின் பங்களையே மெய்யா யெண்ணி
யெண்ணியே முடிந்ததந்தோ பொய்யா கதி
யுன்னையன்றி யாரெனக்கிங் கையா இந்த
இருநில்மதில் வருவினையற
இரவொடுபக லதுகொடுபே
றின்பமருள் ராமசாமி தாஸன் றமிழ்க்
கின்புதருவாயருள்மெய் வாஸன் (3

முப்பழச்சுவை என்ற மெட்டு.

பல்லவி

அப்பனே செந்தூரில் வாழ்பவா ஐயனே வாவா (அப்
எட்டோதிரச்செப்பியா சோட்டாக்கல் ரோஞ்சடையா

இந்திரன்மகளை விந்தையதாகவே
புந்திமகிழ்ந்தும ணந்துபுகழ்ந்தவா

தென்னுதமி ழுக்குகந்தவா தேவாதி தேவா (தென்
புள்ளிமயின் மீதேறும் வள்ளிமணாளா வாரும்

பொங்கரவம்புனை திங்களுமே செருங்
கங்கையணி சிவ சங்கரன் பாலனே

சூரரைச் சம்மாரஞ்செய்தவா சுப்பிரமணிய தேவா (சூர
பாரா முகமேனையா கூறாய் வடி வேலய்யா

பண்டு தொழுந்திருத் தொண்டன்ராமசாமி
தண்டஞ்செய்யும் ஞான பண்டிதனே யென — தப்ப

சிவஸ்துதி.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மேலாயருந் தவமுன் றலே புரிந்துவரி
வில்லா லடித்த வொருவன்
வெள்ளிபங் கிரியைமுன் கள்ளவெம் புயமதனில்
வேரோ டெடுத்த வொருவன்
காலாலு தைந்துதிரு வாயாலு மிழ்ந்துபடு
கல்லா லெறிந்த வொருவன்
கன்னமனத் திரிந்து தின்றுசனத் திலமி
காதஞ் செலுத்து மொருவன்

ஏலாமை யோபிரம் பாலடித் தவர்கள்முத
லெல்லாம்நன் மோட்ச மானார்
ஈசனே யின்கதிசர் வேசனே யென்றுனதி
யேழைநா னொருவ னல்லேன்
ஆலால முண்டதொரு கண்டனே தொண்டருடன்
ஆளடிமை யாக்கி யாள்வாய்
அம்பரவு கொன்றைமகிழ் தும்பையிசை யும்படி—
னம்பலத் தாடும் அரசே. [பொன்

சுஜநஜீவந என்ற தீபககராஜ மெட்டு.

பல்லவி

ரிஷபவாகனு வாரும் நிமலயோகனு—தேவா (ரிஷ
விஷவபூஷணு அருள் பிக்ஷைய ராதனு
திசையின்திரு முகவன்றனைச் சிரசறுங்கொன்மா மாத (ரிஷ
பாலனேத்ர சாலநித்ய பார்வதி பத்தா
பாவநாசவி மோசனப்பிர பரனே கர்த்தா
ஞான ரூபமே வொளிர் நளின தீபமே
நாகரீகலைவ தீககீதா ராமசாமிக்கருள்—தாரும் (ரிஷ

தோனித்திடு சங்கம் என்ற மெட்டு.

பல்லவி

ததிங்கிண நத்தோமென் றும்பாதா (ததிங்
தயங்குற்று லங்குஞ்ச தங்கை தக தகவெனத் (ததிங்
ததும்புசீர்க்கங்காதரா சரணஞ் சம்போசங்கரா

தாங்காது நீங்காத
தீங்கான நீக்கற்றவாய் (தநிங்
அடியார் நன்மணியேயென் ஆவிப்பெருந்துணையே
ஆதாரம் நீதானே
நாதாவே யருள்புரி (தநிங்
சந்ததம் ராமசாமி செந்தமிழ்க் கருள்தேவி
தாசாதி தாசரின்
தாள்சேர வருள்புரி (தநிங்

சந்நிதி விசேடமே என்ற மெட்டு.

பல்லவி.

பொன்னடி பணிவோமே போது
இது நெஞ்சமே (பொன்

சரணம்.

வன்னமலையத்துவச மன்னன் மருகப்பிரகாச
சொர்ண வெள்ளியத் துவாச
தகள்பட நடுங்கி யம்பட ரொடுங்கிப்
பகைடோடு வடங்க வுதைமலர் வயக்கு (பொன்
முப்புரந்தனையெரித்தவொப்பு மான்மழு தரித்த
செப்பும் யானையை யுரித்த
சிவதவமிருந்து பவவினை யறிந்து
பரகதி யடைந்த வடியவர்க் குகந்த. (பொன்
பாற்சமுத்தந்தனையுண்டு மிஞ்சுதிரு நீலகண்ட
செந்தொல் ராம சாமி தேர்ஷ்டன்.

திருவருளோங்கு வரமது வாங்கி
நரைதிரை நீங்கத் தருமலர் பாங்கின் (பொன்

மயிலோ மலர்ச் சோலையில் என்ற மெட்டு.

பல்லவி.

(பொன்னம்-) பலமே சிற்றம் பலமே யெனைப்
பாதுகாப்பா யடைக்கலமே கண்ணாற்
பாரும் நீரும் பொன்னம் (பலமே
புலமே யொருவழிப் படவுந் திடமொடு
புரத்தைத் தேடிச் சிரித்து நாடி
யெரித்துக் கூடிப் பரத்துளாடும் பொன்னம் (பல

சரணம்.

அன்பர்கள் போற்றிடு சிற்றம்பல மணியே
யாரணம் புகழ்ந்திடும் அரவவெம் மணியே
பண்புடனொலிதரு பாதகிங்கிணியே
பகரவாட்டம் புரியுநாட்டம்
அடியர் கூட்டம் அதுவே தேஷ்டம் (பலமே

கந்தமென் கொன்றைவட கயிலையம் பொருப்பே
கதியது பெரும்வழி யுதவுதற் கிருப்பே
மந்திரகிரிமகள் மகிழ்வுறுசிறப்பே
மலியுத் திராக்ஷ மணியின் றீக்ஷர்
மெனி கடாக்ஷ மிருகன் மோக்ஷம் (பலமே

சந்தரம் போற்றுராம சாமிரசூதகனே
சற்சனர் யாவருங்கொண் டாடு முற்சவனே
நந்திமுதலோர்துதி ஞானநற்சுகனே
நனிபெற் றோங்கி மவுனப் பாங்கின்
அடியர்க்கேங்கி பருளைத்தாங்கி பொன்னம்

கண்ணன் துதி.

எழுசீர்க்கழில் நெடிலடி யாசிரிய விருத்தம்

துங்கமாமறையு பலர்வதனமும் அழகுடைத்
துளபமாமௌலி யழகுஞ்
சுடர்மகர குண்டலச் செவிகளுந் திருமாது
தோய்களப மார்பினழகுஞ்
சங்கம்வடிவாள் கதைபொன்னாழி யங்கையிலொளிர்
தண்டகோ தண்ட்வழகுந்
தயிர் திருடியுண்ட செங்குமுத வாயுஞ்செழிய
தாமரைக் கண்ணி னழகும்
செங்கைவிரலாழியும் செம்பொன்மணி யரைடையுந்
திருமேனி வண்ண வழகுஞ்
செங்கருடனேறிவரு கங்கைகமழ்பாதமுஞ்
சேயனொரு போதுமறவேன்
மங்களமதான தண்சோலைமணி மாடம்நிறை
மாசோழ நகர மீதே
யாமதுராமிகுராம சாமிபணி பவசேம
மோசதல்ந்திர நாமனே,

பரமானந்த மெய்ப்பரங் குன்றேன் என்ற மெட்டு.

பல்லவி.

ராமா வருள்செய் பரந்தாமா தசரதஸ்ரீ
ராமா வருள்செய் பரந்தாமா

அநுபல்லவி.

சாமள மேமிகு ரூபமே கொண்ட
தாடகையைச் சமராடி வெகுண்ட
மாமுனிக்கே மகமீயும் வைகுண்ட
மாதவசித்ர நாத கோதண்ட (ராமா

சரணம்.

மிதுலாபுரியதனிற் சென்று சிலை வளைத்துச்
சனராகச் சீதையை மணத்து பரசுராமன்
எதிரேவரச் சிலைகவர்ந்தும் அயோத்தி யென்னும்
பதிமேவியன்னை சொற்பதிந்து தம்பியுந்தானும்
பந்தே நிகர்ந்தே யிணைந்தே யிசைந்திர்த னத்தாள்
சானகியுடன்
முந்தே வணங்கே மகிழ்ந்தே நடந்தேகு கன்பாற்
சிநேகங்கொண்டு
வந்தே யெழுந்தே யயர்ந்தே தாமென்றதம் பிக்கே
பாதுகை தந்து
அன்றே சினந்தே யிலங்கை மன்தங்கைதன் னங்கம்
பங்கமே செய்து
வாட்டவே கரனொடியாவருமோடவேசமராடியேவிழ வாட்டி

யபர முட்டி

நாடியேபெதி ரோடுமானையி டார்டியேசம ரர்டியேசெயம்
நாட்டித் தம்பியைக் கூட்டிக்
காடியே யிறகாடியே யுயிரோடியே வீழ்சடாயுவைக்கதி
காட்டிச் சீதையைநாட்டில்த்
தேடியேகட மாடியேபல மேவாடியேமனம் வாடியே சரந்
தீட்டி வாலியை மாட்டி
வைத்தெழும ரந்தையும்வ ளைந்தொருவி தத்தியம
தெத்தியெழு பந்தெனும்வெள் ளத்துவான ரத்தோடனு
மானோடு சுக்ரீபனோடு
தத்துகட லொத்தவணை வைத்ததில்ந டத்திநக
ரத்தையும்வ னத்தையுங்கொ ழுத்தியேயெ ரித்தனையைத்
தான்கண்ட அநுமன் கண்டு
மோதியகும் பகர்ணுதிய வன்படை
வீதியிலுஞ் சமர்மீதிலழிந்திட மோதி
பலநன்னீதி
கூவிபதம்பியால் ராவணன் மைந்தனை
மேவிய வன்றனை தார்வியழிந்திடக் கொன்று
சமரிலன்று
முறித்த குணத்தைப் படைத்து மெதிர்த்து
மொய்த்தமூலபல மத்தனையும் விடி முன்னே
ராவணன் றன்னைக்
குறித்த சரத்தை யெடுத்துத் தொடுத்துக்
கொத்துடனே விழப் பத்துமுடிகளைக் கொய்து

தானமே செய்து

கொண்டல் விபூசனனென்னுங் கொற்றவர்க்கிலங்கைதந்து
கொஞ்சிய சானகியெனும் வஞ்சிசிறை மீட்டிவந்து
தண்டமிழ்ச்சொல் ராமசாமி தாசனுக்கருள்புரிந்து
சாற்றியவமரர் போற்றப் யோக்கியிலைசு செய்த (ராமா

வாகலியுக வரதா என்றமெட்டு.

ராமனை நினைமனமே நாளும் நயமே (ராமனை
நளிர்துளவணி ஸ்ரீமந் நாராயணனென்றேத்தி (ராம
நமோத்து சிந்தநன் நாதாவென்றனுதினம்
சமார்க்கதிகதீர தாமோதரனும் அரி (ராம
சானகி சீலன் தசரதபாலன்
தாசனிராமசாமி சாற்றுந் தமிழ்க்கருளும் (ராம

—:::—

சத்துருசங்கார என்ற மெட்டு

பல்லவி.

சங்குசக்கரக் கோதண்ட ராமா சானகி பூபா
கங்கைகமழ் பொற்பாதா மங்கை ருக்மணி சமேதா
கடகரிக்கு முன் னிட ரகற்றிட
மடுவினுக்கரை நொடிதனிற் சென்று
சாமள சொரூபங் கொண்டவா காலமுண்டவா
காமன்றனைப் பயர்தாய் பாபன்றனை முன் சொன்னாய்

கண்ணு யெழின்மணி வண்ணு துளவணி
யண்ணு வேறு யெனை யெண்ணு தருள்புரி
நந்தகோவிந்த வைகுந்தனே நம்பி வந்தேனே (நந்
செந்தாமரைப் பொற்பாதம் தந்தாதரிப்பாய் நீதம்
சேமமிகும் ராம சாமி தமிழ்க்கருள்
ராமனே பன்னிரு நாமனே வாமனே (சங்

சுயராஜ்ஜியம் நமக்கு என்ற மெட்டு.

பல்லவி.

சங்கம் வடிவாள்வலயந் தண்டகோதண்ட ராமா
தண்டுளப மாலையதுங் கொண்ட மார்பனே
மங்கள வரப்பிர சாதா
மங்கை ருக்மணி சமேதா
கங்கையுங் கமழ் பொற்பாதா
கார்வண்ணப் பிரக்யாதா (சங்

தொகையறா.

மச்சமெனும் ரூபனே வாமனவ தாரனே
வராகமாய் மழுவில் லோனே
மாபலி திபாகனே தூணில் நரசிம்மனே
வைகுந்த பதவி யோனே

எடுப்பு.

அண்டபகி ரண்டமும் பண்டுண்டவா யழகனே
ஆதிபரந் மாகிய வ சோணத னைமந்தனே

ஆரணத் தெரி மெய்
யன்பனுன் ராம
சாமி செந் தமிழ்க்கு கந்தசா அரிய
வச்சுத ரக்ஷக பர்ஸை மேனியனே (சங்

வடி—வேலா சுகந்தரு வேலா என்ற மேட்டு.

தரு.

ரகு—ராமா சானகி ராமா தசரத ராமா வுன்னை
நம்பின யேழை நான் துன்பப்படலாமா (ரா

இரண்டு குழைகளிலிலங்கிட பண்டரி மீது வளர்ந்திடும் (
நடமொடு வழைத் திடுமடுவினிற்
கடகரிக் கெதிர் கொடிதனிற் சென்ற (ரா
நவிந்த பரி மனந்தருக
ளபகதனை மார் பணிந்தருள்ப ரசு (ரா
நற்சுகந்தி னைக் கொடுத்தி
ருத்தியற்பு தத்தின் முத்தி யருள் (ரா

சரணம்.

நங்கை சானகியன் ளைிற்சிறை மீட்டி,
நம்பும் வீடணர்க்கி லங்கை முடி சூட்டி
துங்க ராவணன் து டிக்கச் சிரம் வாட்டி
அப்யவப்யோத்தியை யாளச்செயகோஷ்டி
சொற்சுவைப்படி பாசுரக்கவி
யைச்செயும் ராம சாமி ரக்ஷக (ராமா

திருவிழாப் பரிமள— என்ற மெட்டு.

பல்லவி.

ரகுபதி யருள் தகி
நடித்தரவ வெம் படத்திலேறிய (ரகு

அகலிகா சாபந் தீர்த்த பாதார
வாதி மூலப்பொரு ளான விஸ்தார
சகல ஜீவ த யாபர தீர
சாந்தமிகு குணம் வாய்ந்த வுதார (ரகு

அன்று பஞ்சவர்க்காய்ச் சென்றிடுந் தூத
ஆயப்பாடி வெண்ணை யருந்திய நீத
கன்றாற் கனியை யெறிந்த மதுசூத
காகுத்தனே யென்னை நீதக்ஷட ஞாளும் (ரகு

சீரார் பதியிற் றிருவரங் கேச
செய்ய களபப் பரிமள வாச
தாரார் துளபத் தடம்புய ராச
சாமளனே ராம சாமிதமிழ்ப் பேசும் (ரகு

சந்தோஷம் சந்தோஷம் என்ற மெட்டு.

பல்லவி

நந்தகோ விந்தனே நம்பினேன் வைகுந்தனே (நந்

நங்கை சானகி ம யங்கவே சிறைபி
டிங்கொல் ராவணன் கலங்க வாளிதொடும் (நந்

சரணம்

அண்டர் பாடிதொறும் வெண்ணெயை யுண்டு
ஆயர் மாதர்கள் புண் போகமுங் கொண்டு
கண்ட தாயா லுர லோடுமே பண்டு
கட்டி மோதவடி பட்ட மேனியனே (நந்

என்றுமே வனத்தி விளம்பசு மேய்த்து
இன்ப ராமசாமிக் கேயருள் கொடுத்து
கன்று பேகொடு விழாங்கனி யுதிர்த்து
கஞ்ச மாமனுமே துஞ்ச வெஞ்சமர் செய் (நந்

சேந்தமிழை யுலகினில் என்ற மெட்டு.

எந்த நேரமுந்தவரா துந்தனை நினைந்திடாமல்
எந்தையை மறக்குமோ நெஞ்சம் வழைக்கிறங்கா
தெந்தனை மறப்பதேன் வஞ்சம் உந்தன்
இருதய கமலமும் இளகவு மிலையுன
திருசெவிகளி லுரை நுழைய மிலையினி
யெப்படித் துதிப்பேன் பிரபஞ்ச மாய்கையெனுமோர்
இப்பிறவி தீர்ப்பா யுன் தஞ்சம்

வந்த பிணி நோவிடம் முந்த வினை யுள்ளதெல்லாம்
மாற்றிடுவ துந்தன் பாரமே அடியேனையே
மாற்றிடாம லிந்த நேரமே அன்று
மடுவினி லொருதனி முதலையு முயிர்விட
நொடிதனி லலறிடு கடகரிக் கருள்செய

மட்டும் ஞாபகம் வந்ததோ அடியேற்கெளிம்
மட்டும் நினை வயர்ந்ததோ

அத்தனை நானித்தரை மீ தெத்தனை செய்துற்ற பிழை
யத்தனை நிவர்த்தியுஞ் செய்வாய் அசோதையருள்
புத்ரனே நான் நத்தினே னையா நினா
தன்பருடன் பத முப்பரவும்பெரு
இன்ப சுகந்த வ மும்பரவும் பத-
யாகக் கிருபையும் பெய்யாய் பாம்பணைமீது
யோக நித்திரைபோ மெய்யா

வம்புசெய நம்புமத வம்பளியுங் கும்ப முலை
மாதரால் மயங்கினேன் நாதா வடியேன்படும்
பாதரவதுவுந் தி ராதா யின்று
மதுமழை யதுபொழி வடிசர மலர்கொடு
மதனம்மிடவுமென் வடிவமும் மெலிவொடு
வாடிய பேதை நெஞ்சா னேன் நின்றுளென்சிரம்
சூடிய போது பஞ்ச மேன் (எந்த

வண்ணம்.

தெண்டிரை கடைந்துமுனம் அண்டருக்க முதளித்த
கொண்டல் நிறமேனியனே வண்ணா செழும்
புண்டரீகச் செந்தாமரைக் கண்ணா மலர்த்
தண்டுளப மாலையணி யண்ணா முன்பு

O2:4176 N25

சீதையைச் சிறைபெடுத்த பாதகன் முடிதுணித்த
சித்திரக்கோதண்டமேந்தும் கையா யோக
நித்திரைப் பாண்டுரங்கனே ஐயா
சீதை நாதா நீதபோதர் நாளுஞ்
சிந்தையுடன் ராமசாமி செந்தமிழ்க் கருள்புரியுஞ்
செந்திரு மணந்த திருத் தோளா வுன்னைச்
சிந்தையில் மறவேன் நெடு நாளா யெனை
வந்தருள்புரி வாய்மலர்த் தாளா ஆதி
சேஷசய னத்தை விட்டு மேபிரக லாதனிடத்
தேதூணில் நரசிம் மாவதாரா வரு
நீதனே யிரணிய சம்மாரா
தேவதேவா கர்வாய் வாவா ஸ்ரீ
ராகவகேசவபிரக் யாதவ மாதவனெனும்
நந்தகோபன் மைந்தனே முகுந்தா திரு
வுந்திபூத்திடும் அரி கோவிந்தா கள
பந்தனை யணிந்த ஸ்ரீ வைகுந்தா வரி
ராமரகு ராமமமு ராமபல ராமதிரு
நாமனே வாமபன்னிரு நாமா பரந்
தாமனே யெனைக் கைவிடலாமா
ஞாயமாமா மாயனேயா போரின்
மெத்தவிர தத்தினசு வத்தையுன் நட்பின்
மைத்துனனும் வெற்றிபெற வென்று பார
தத்தினி லிருளமைந்தா யன்று அந்த

58930

யுத்திபோலெனை நீகாப்ப தென்று சதுர்
வேதமுடிமீது மலர்ப்பாதமேனை யாத வர்மனே
வெண்ணெயள்ளி யுண்டருள்செவ் வாயா யிந்த
மண்ணுல கெலா மளந்த நேயா
வேலை நீயே ஆளுவாயே.

ஆயர்பாடியில் மாதர்கள் அசோதையிடம் முறையீடு.

மஞ்சுநிகர்-என்ற மெட்டு.

ஆயர்கள்.

என்னடி யம்மாவ சோதையே வுனதுமகன் மனதினகம்
எவ்விதந்தான் சொல்வேன் கோதையே அவன்
எதுவாகவே சூதுவாதுகள்
நீதியில்லாமலே யோதியேதினம்
எங்களைப் பரிகாசம் செய்கிறான் கேலிகள் செய்து சாலவும்
யென்னமாயச் சாவகாசஞ் சொல்கிறான். [வைது

இன்னமுஞ் சரசமுமிஞ்சி யேந்திளைவஞ்சியெங்களைக்கெஞ்சி
யென்னைத் தொட்டிழுக்கிறான் கொஞ்சி மய்ய
லேகவுஞ்சுப மாலையும் அதி
காலையுஞ் செயும் லீலையின் சுகம்
என்னவென் றுரைப்பேனம்மா சிறுவனென் றுன் மகனை
யெப்படிச் சொல்லுவேனுன் சும்மா, [யின்றிங்

மெத்தையில்நான் நித்திரைசெய்து விழிதுயிலு மளவினிலு
மேவிய படுக்கை வந்தெதிர்ப்பி அவன்
வேய்ந்தமன்மத சாஸ்திரத்தையும்
ஆய்ந்து நின்மக னெய்த் துரைத்துமே
மெத்தவே யெங்களைமயக்கி ஆடைவிலக்கி கூடியிணைக்கி
மெல்லியர்கற்பெல்லாமழித்தான்.
வைத்தவெண்ணை யெத்தனையுங்கொண்டு வாரியேகொண்டு பால் தயிருண்டு
மாறிய களவையான்கண்டு நீயும்
வாவுனக் கொரு நாயிடத்தினி
லேயெனச்சொலி நானழைத்திடும்
வார்த்தை கேட்டமாத்திரத்திலே மானமுங்கெட்டு யானும்
மால்ராமசாமிசொற் கோர்த்திட்டேன். [வந்திட்டேன்

ஷை ஆயர்மாதர்கள்.

காரண மாகுந்தெய்வ-என்ற மெட்டு.

சிந்து.

அண்ணான்றபிரை யள்ளி யுண்ணா பறிகொடுந்தால்
யார்க்குஞ் சம்மதமாகுமா யிதுவும் உனக்
கேற்குமோடி வீண்போகுமா யின்னும்
ஆவலுடன்சிறு மோகமிகுந்துமே
கூவியேயெந்தனை மேவியணைந்திட
வஞ்சாமற் கெஞ்சானம்மா யெனது நெஞ்சங்
கொஞ்சமே வஞ்சுதேசபமா.

அசோதை.

நின்னிலேயின் கண்ணிருந்து வெண்ணி வெண்ணையருந்தி
சேயனிருக்கிறானடி நீங்களிப்படி
ஞாயமுறைப்பதேன் போடி அவன்
தேகமதிற்றமி ரேகையைத்துசி
யாகமதிற்பட வாகுடனிறபதைச்
செயினோயே நீபாரடி நீங்கள் சொல்வது
மாயமாய்த் தோணுதே போடி.

(ஆயர்மாதர்.)

என்னடியம்மா நாங்களுன்னிடம் பொய்சொல்வதில்
எங்களுக் கென்னலாபமோ வுள்ளதைச் சொன்ன
பெண்களின்மீது கோபமோ யினி
யெப்படியாவது கைப்பிடியாய்ப்பிடித்
தொப்பிய போதுநீ செப்புவையேசரி
யில்லாததையேன் சொல்லுவோம வுன்மகன் செய்கை
யெல்லாம்பின் நீயே விள்ளுவாய்.

(அசோதை)

சொன்னபடிக்கே நீங்கள் பெண்மகனின் களவைத்
தோகையே கொண்டு வாருங்கள் அல்லது குற்ற
மாகினேனென்று சேருங்கள் மகன்
சோரமதைசசரி யாகவுரைத்திடும்
சேரமதிறபரி காரமதற்குநான்

தொண்டுநான் செய்வேனுனக்கே யவனைபும்பின்
தண்டனை செய்வேனதற்கே.

அசோதை.

முகவண்டு வாசமண்டு--என்ற மெட்டு.

சிந்து.

பாலையுண்டு மோரைமொண்டு கேலிவிண்டு காதல்கொண்டு
பாடிதோறும் ஆவலாகியாக்கினாய் வந்த
ளேடுபிள்ளைப் பாசமெல்லாம் நீக்கினாய் என்ன
பாதகம்பெரு தீதுவுமபுரி வாதுவம்புக ளோதியுந்தயிர்ப்
பானைசல்லி சல்லிபாகத் தாக்கின யென்று
கோனிடையர் மாதர் சொன்ன வாக்கினால்.

(கிருஷ்ணன்.)

காலயர்ந்து மேனுலர்ந்து சாலநொந்ததாலே நைந்து
காதடைந்துபோகவே யென்னம்மணி யென்னை
நீதுடர்ந்து வாரதென்ன பெண்மணி என்ன
காரணங்க ளுதாரணங்களு மாரணங்கள் காரணங்களே
காமமோ வர்மமோ சொல்வாயுண்மையே யிது
தர்மமோ மர்மமோ நின்சொல் வண்மையே.

(அசோதை.)

வாடாதெயெந்தன் கண்மணியே ஓடாதிந்த நேரமாயர்
மங்கைமார்க்குச் செய்தபெருங் குற்றமே அதை
யிங்கெனக் குரைத்தாரவர் முற்றுமே நீயும்
வந்துகந்துந டந்தநிந்தவி தந்தெரிந்தது நிந்துணர்ந்திட

மைத்துனே நீயெந்தனக் கின்புற்றுமே சொன்னால்
நிந்தனை புரியேனுனைச் சற்றுமே.

கிருஷ்ணன்.

மாடுகட்டுந்தும்புதடியோடு கிட்டிபெல் பின்வரு
மார்க்கமதைக்கண்டு பயந்தோனுதே மன
தேக்கமுடனேமயக்கங் காணுதே அவர்
வைத்த வெண்ணெயை நித்தமுண்ணிலன் மெத்தமண்ணில
[னத்தமெண்ணியே
வம்புசொல்வர் நம்பலாமோ வஞ்சமே என
தன்பன் ராமசாமி நானுன் தஞ்சமே·

பூமிமெச்சிடும் என்ற மெட்டு,

கிருஷ்ணன்.

அம்மம்மா நீசும்மா யெம்மை நோகவேயே
னடிக்குறா யென்னைத் தடுக்குறாய் கையைப் பிடிக்குறாய்
சும்மா அனித்யவாழ்வி தென்று
நினைத்திடாமல் நினைந்
தட்டுறா யென்னை மிரட்டுறாய்

அசோதை.

எம்மனோர்களேனிச் செம்மலீன்றை யென
யேசுவார் சொல்லி வீசுவார் நமர் கூசுவார் ஐயோ
இருக்கும் வெண்ணெ யெல்லாம்
யிறக்கி யுண்பாரோ வென்
றேசுவார் சொல்லிப் பேசுவார்,

கிருஷ்ணன்.

ஆடடையச் செய்யுங் கோனிடையர்க் கோர்பே
ரண்டரோயிவர் வண்டரோ திண்டு முண்டரே
அங்குமே திருட
மங்கைமார்கள் பார்த்த
ரண்டரோ யென்னைக் கண்டரோ

அசோதை,

மாடகூட மொளிர் வீடுதோறு மாயர்
வஞ்சிமா ரொடு மஞ்சமேல் நீயுங் கொஞ்சியே
வைத்தவெண்ணை தனை
நித்தமுண்ணலாமோ
வாஞ்சமே பாவ மிஞ்சுமே

கிருஷ்ணன்.

கண்டுவாசகிநா னுண்டதோர் களவைக்
கண்டனை பெருந் தண்டனைசெய்து கொண்டனை யென்றூட்
காட்டினானுலகை
யூட்டியே யுறங்கக்
கண்டனள் பயங் கொண்டனள்

அசோதை.

அண்டரண்ட பகிரண்ட முண்டவகி
லாண்டவா அன்பு பூண்டவா தூதுமீண்டவா முன்பு
ஆயர்வீதி தோறும் ஆடி நின்றபிர
பாீண்டவா வருள் நீண்டவா.

சேந்தின்மாநகர்-என்ற மெட்டு.

எங்களாடையை யிங்குதரா விடிலேது செய்வோந் தெரி
யாயோ பெருந் திருவருங்குறி யாயோ நீயும்
இங்ஙனேமுன் னிறங்கியேதுகி
லுங்கொடாயல தெங்களாலுனே
இப்பவே பெருந்தண்டனை யாக்குவோ மீதறியாயே நீ
கோராய் நல்ல சோதைமகனே நீபாராய்.

பெண்களோடும் பிறந்தவனோ நீயும்பேய்கள் கூடப்பிறந்
தாயோ பெற்ற தாய்பெண்ணல்லாமல் வந்தாயோ வேறு
பேதமில்லையே யாகிலிவ்வித
மானசெய்கையால் வாதியெங்கட்குப்
பேரெடுத்தனை நீயிடைச்சிக்கொரு பிள்ளையே யீதேயா
பாசமே துகில்க் கொள்ளை கொண்டாய் பெருமோசமே.

கொண்டுபோ யெங்களாடை யெல்லாமரக் கொம்புகடோறு
சேர்த்தாயே இப்போ வம்புவழக் கெடுத்தாயே நீகு
ருந்திலெட்டிமு டிந்தபட்டையி
றுந்துவிட்டுந டந்திடோமினிக்
கொஞ்சமேனு முன்னெஞ்ச மஞ்சாமற் கொடுமை செய்தாய்
பாலனே உன்ன டிமைபோலாகினோஞ் சீலனே [சிறு

தண்டுளாய் மணிவண்ணனே நீகள்ளச் சாலங்கள் செய்ய
லாமா இந்தக் கோலங்கள் காட்டிடப்போமா கமழ்

சந்தனம்பனீர் குங்கும்புழு
குங்கலந்தணி யும்புயாசல
சப்தசாகரா யெத்தனை நேமாய்ச் சாற்றுகிறோம் பதில்
இல்லை நீயே மாற்றுகிறாயென்ன தொல்லை. (எங்களா.

தொண்டிச் சிந்து.

பாழும்மட நெஞ்சமே இந்தப்
பாரிற்பிறந்தவரென் பயனடைந்தார்
எழுவகைப் பிறப்பில் யோனிபேதம்
எண்பத்து நான்குநூறாயிர மதிலே
மானிட சென்மமும் மேலாம் அதிலும்
வாய்பேசாது கூன்குருடு மானசெவிடும்
ஆனகுறை யாவையும் நீக்கி யுலகில்
ஆண்செனன மாவதுவே யரிதாகும்
என்றுமுன் நூல்களெல்லாம் கூறி
யிருப்பதி லென்னவன்னை கருக்குழியில்
அன்றுவருந் தோனல்லாமல் நம்மா
லாவதொன்றில்லை வினையறிகிலீரோ
ஊத்தைச் சடலமிதுவே மண்மேல்
உப்பிருந்த பாண்டமிவை யொப்பி நினைக்கில்
மாற்றிப்பிறக்க வறியோம் பிறந்தாலும்
வாசியொரு வழிப்படு மார்க்கந் தெரியோம
காரிற்றெரியுஞ் சிலைபோல் அதினிடும்.

காற்றைப் பிடித்தே யடைக்குஞ் சோற்றுத் துருத்தி
　　நீரிற்குமிழியது போல　　　மின்னலும்போல்
நிட்செயமில்லா வுடன்மேலிச் சைவைத்துமே
　　கூறிடிற் கேட்டவர்க்கே　　　　யியாமற்
கோடிகோடியாய்த் திரட்டிக் குவித்தபோதும்
　　தேகம்விட் டுயிர்போகும் பொழுது　இவைகளுந்
தேடியபொருளக ளெல்லாங் கூடவருமோ
　　நில்லாதெல்லா மிரவல்　　　　என்றும்
நேயபாசுரஞ் சொல்ராம சாமியைககாக்க
　　எல்லாம் வல்லவொருவன்　　　ரக்ஷகனுய்
யிருக்கிருனவன் செயல்ப்படி நடக்கும்　　[பாழும்

கண்ணிய மிகுந்த சுகமாரா-என்ற மெட்டு.

மாதர்களைச் சேர்வதே யாபாசம்　　　அதை
மாற்றிவிடுவது பன்யாசம்
ஓதிடுஞ்சிவனடியார் நேசம்　　　　உள்ளோர்க்
குண்டோ வுலகினிற்று வேசம்.
சிற்றின்பத்திறைற் பயனென்றில்லை　　யதின்
செய்கையெல்லாங் கெடுமே தொல்லை.
சற்றுமே பயன்றி யார்க்கெல்லை　　　நமன்
தண்டனையே நரகக் கொல்லை.
காமமுமிகுந்தவர்க்கிப் போது　　　அந்தக்
கருணாகரன் கிருபை யேது

ஏகபராபரனே யென்றோது. வோர்பே
ரின்பமடைகுவர் தப்பாது.

கள்ளுடன் சாருயங் குடி-கேடு அபின்
கஞ்சாபிராந்தி கள்ளிப்போடு

உள்ளத்தற நில்லையை நாடு எங்கு
முண்டோவுலகி லுனக்கீடு.

புள்ளிக்கலாபமயில்-என்ற மெட்டு.

தங்கத்திரு மடந்தை வாழும் மார்பும்
துங்கத் துளாய் முடியுந் தோளும் நேமி
சங்கொருகை வில்லொருகை
தண்டொருகை வாளொருகை
தாங்கி யருளோங்கி

தங்கியதொரு மடுவிற் சென்று முனம்
வெங்கரா வுயிர தனை வென்று நீயே
தஞ்சமென்ற ழைத்ததொரு
குஞ்சரத்தைக் காத்தருளுந்
தண்ணார் கடல் வண்ணா

கக்கோவிந்த ஸ்ரீவைகுந்தா அர
விந்தமுகுந்த சோலைமைந்த புன்னை

நம்பும்ராம சாமிதன்னே
அன்புடனே யாதரிப்பாய்
நாதா மலர்ப் பாதா
அந்தாதேவர் தொழுங் கெம்பீரா வுயர்
எந்தையே யிரணிய சம்மாரா நீயும்
அன்றுபஞ்ச வர்க்காய்தூது
சென்று வெஞ்ச மர்முடித்த
ஐயா மணி மெய்யா (தங்கத்

மாதவியே மாதவியே-என்ற மெட்டு.

தரு

மங்களமே மங்களமே சக்ர
வர்த்தி ஐந்தாஞ் சார்ஜ வர்க்கு (மங்களமே
அவர்—மைந்தர்மகா ராணியவர்
சந்ததம்செங் கோல்தழைக்க (மங்களமே
வாழியவே வாழியவே ஆான்
...குலகா ளிமுன் ஞெனும் (வாழியவே
வேத-மந்திரங்கா... புவனமிச்
சிந்துசெல்ரா... மசாமியும் (வாழியவே

செந்தமிட்பாசுர பக்திரசக் கீர்த்தனை
முற்றிற்று.

58936
OZ: 417xc
N25

உ

முருகன் துணை.

சாத்துங்கவி,

SCANNED

உமேலை ஸ்ரீமான் சரபகவி மாணவர்,
ஆரியபாலகான சபாசிரியர்
சென்னை மகா-ள-ள-ஸ்ரீ
ச. சு. சங்கரலிங்க நாடாரவர்கள் எழுதியது.

விருத்தம்.

நேமிமால் முருகன் ஈசன்
    நீணிலம் புகழுங் காளி
மாமல ரடியைப் போற்றி
    வளர்தமிழ் பாடற் கோர்த்தான்
பூமியிற் புலவர்க் கெல்லாம்
    பூஷணம் போன்ற ராம
சாமிநற் பெய ரமைந்த
    சந்திர குலத்தோ னம்மா.

SCANNED